# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • மே 13, 2023

Weekly E-paper • May 13, 2023



## ஆள்கிறது திராவிடம்!
## அகன்றது ஆரியம்!!

சுப.வீரபாண்டியன்

### ஆளுநரின் அதிகாரமும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பும்!

மதிவாணன்

### ‘தமாஷ்’ பண்ணும் அண்ணாமலை

தலையங்கம்

### பெரியவர் இளையபெருமாள்

பேரா.சுவாமிநாதன் தேவதாஸ்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● மே 13, 2023 Weekly E-paper ● May 13, 2023


# ஆள்கிறது திராவிடம்! அகன்றது ஆரியம்!!

சுப.வீரபாண்டியன்

காங்கிரஸ் இல்லாத இந்தியா என்று கற்பனை செய்தது பாஜக! பாஜக இல்லாத தென்னிந்தியாவை உருவாக்கி விட்டார்கள் மக்கள்!!

கர்நாடகச் சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் பெற்றிருப்பது சாதாரண வெற்றி இல்லை, ஒரு சாதனை வெற்றி! ஒன்றிய அரசில் மட்டுமல்லாமல், மாநில அரசிலும் ஆளும் கட்சியாக இருந்த, அத்தனை அதிகாரங்களையும் தேர்தல் களத்தில் இறக்கிவிட்ட, சாதி, மத உணர்ச்சிகளைத் தூண்டிவிட்ட பாஜகவை, களத்தில் புறம் கண்டிருக்கும் காங்கிரஸ் பெரும் வெற்றியையும், நாடெங்கும் உள்ள ஜனநாயக சக்திகளின் பாராட்டுகளையும் பெற்றிருக்கிறது!

மதச்சார்பற்ற ஜனதா தளத்துடன் கூட்டணி வைக்காமல், காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டதால், வெற்றி வாய்ப்பை இழக்கக்கூடும் என்று சில ஊடகங்கள் குறிப்பிட்டன. தேர்தல் முடிந்த பிறகு வெளிவந்த கருத்துக்கணிப்புகள் கூட, கர்நாடகத்தில் தொங்கு சட்டமன்றம் ஏற்படக்கூடும் என்றும் தேர்தல் முடிவுகள் இழுபறியாகத்தான் இருக்கும் என்றும் குறிப்பிட்டன. அனைத்தையும் பொய்யாக்கி, அபார வெற்றியைப் பெற்றிருக்கிறது காங்கிரஸ்!

மதச்சார்பற்ற ஜனதா தளடத்துடன் கூட்டணி வைக்காதது பல விதங்களில் சரியானதுதான்! அவர்கள் மதச்சார்பற்ற என்று தங்களை அறிவித்துக் கொண்டார்களே தவிர, சாதி சார்பற்ற என்று எப்போதும் குறிப்பிட்டுக் கொண்டதில்லை. அது மட்டுமல்லாமல், அவர்களிடம் எப்போதும் ஒரு நிலையான தன்மையைப் பார்க்க முடிந்ததும் இல்லை. பாஜக எதிர்ப்பில் அவர்கள் உறுதியாக இருந்தது இல்லை. குடியரசுத் தலைவர் தேர்தலில் கூட, பாஜக வேட்பாளரான முர்முவுக்குத்தான் அவர்கள் வாக்களித்தார்கள். எனவே தனித்து நின்று பெற்ற இந்த வெற்றிதான் காங்கிரசுக்கும். கர்நாடக மாநிலத்திற்கும் நல்லது!

2018 ஆம் ஆண்டின் தேர்தல் முடிவுக்கும், இப்போது வெளிவந்துள்ள தேர்தல் முடிவுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் குறிப்பிடத்தக்கவை. 2018ல் 104 இடங்களில் வெற்றி பெற்றிருந்த பாஜக, இப்போது எழுபது இடங்களுக்கும் கீழே வந்து விட்டது! அந்தத் தேர்தலில் வெறும் 80 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றிருந்த காங்கிரஸ், இன்று 130 இடங்களைத் தாண்டி இருக்கிறது. இதனைச் சாதனை வெற்றி என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது!

இரண்டு கட்சிகளும் பெற்றுள்ள வாக்கு வித்தியாசத்திலும் பெரும்



வேறுபாடு இருக்கிறது. 2.3 சதவீதம் வாக்கு வித்தியாசம் மட்டுமே சென்ற தேர்தலில் இருந்தது. ஆனால் இப்போது பாஜகவை விட ஏறத்தாழ 7 சதவீதம் கூடுதலான வாக்குகளைக் காங்கிரஸ் பெற்றுள்ளது.

இந்த மாபெரும் வெற்றிக்கு என்ன காரணம், எது பின்புலமாக இருக்கக்கூடும் என்று எண்ணும்போது நமக்குச் சில விடைகள் கிடைக்கின்றன.

பாஜகதான் முதல் காரணம் என்று சொல்ல வேண்டும்! காங்கிரசின் கூட்டணி ஆட்சியைக் கவிழ்த்தது, ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகும் உட்கட்சிச் சண்டைகளில் ஈடுபட்டது, வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதாகச் சொல்லி ஏமாற்றியது, லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள், ஹிஜாப் உடை அணியக்கூடாது என்று சொல்லிச் சர்வாதிகாரம் செய்தது எனப் பல்வேறு காரணங்களால் பாஜக தன் வீழ்ச்சியை சந்தித்திருக்கிறது! ராகுல் காந்தியின் ஒற்றுமை நடைப்பயணம், அவருடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நியாயம் இல்லாமல் பறித்ததால் ஏற்பட்ட பரிவு ஆகியனவும் அவர் செல்வாக்கு கூடியதற்குக் காரணமாக இருக்கலாம்.

எப்படியோ நம் கழகத்தின் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் சொல்லி இருப்பது போல, திராவிட நிலத்திலிருந்து பாஜக அகற்றப்பட்டுள்ளது.

ஆள்கிறது திராவிடம்! அகன்றது ஆரியம்!! ●

# ஆளுநரின் அதிகாரமும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பும்!

**மதிவாணன்**



டெல்லி அரசு தொடுத்த வழக்கில் உச்சநீதிமன்றத் தீர்ப்பு, மக்களாட்சியை விரும்புபவர்களுக்கு இனிப்பாக வந்துள்ளது. துணைநிலை ஆளுநர், மக்களால் தேர்வு செய்யப்பட்ட அமைச்சரவைக்குக் கட்டுப்பட்டவரே என்கின்றது அந்தத் தீர்ப்பு.

விடுதலை இந்தியா உலகின் மிகப்பெரிய மக்களாட்சி என்று சொல்லிக் கொண்டாலும், தெளிவற்று விடப்பட்டுள்ள அதிகார வரம்புகளைக் கொண்டு மக்களாட்சியைக் கேலிக்கூத்தாக்கும் நிகழ்வுகள் அண்மைக் காலங்களில் ஒன்றிய அரசுக்கு ஆதரவாகத் தொடர்கதையாகிக் கொண்டிருக்கிறது. அதில் மிக முக்கியமானது ஆளுநர் பதவியைக் கொண்டு மாநில அரசுக்கு எதிராக ஒன்றிய அரசு செயல்படுவது.

ஒரு மாநிலத்தில் மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசாக இருந்தாலும், அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் அல்லது அதன் செயல்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போடும் வகையில் ஆளுநர்கள் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில்.

மக்களால் தேர்வு செய்யப்படாத, நியமன ஆளுநரின் இதுபோன்ற செயல்பாடுகள் இந்தியா இன்னும் முழுமையான மக்களாட்சியாக மாறவில்லை என்பதையே தெளிவுபடுத்துகின்றது.

டில்லி நீதிமன்றத்தில் தற்போது வந்துள்ள தீர்ப்பு இதுபோன்ற செயல்பாடுகள், சட்டமன்றத்தை நீர்த்துப்போகச் செய்யும் என்று தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளது. சட்டமன்றம் நீர்த்துப்போகும் என்றால் மக்களாட்சி என்பது கேள்விக்கு உள்ளாக்கப் படுகிறது என்பது பொருள். அதிகாரிகள் மற்றும் ஆளுநர்கள் அரசுக்கும் அமைச்சரவைக்கும் கட்டுப்பட்டவர்களே என்று உச்சநீதிமன்ற அரசியல் சாசனப் பிரிவு கூறியுள்ளது.

ஆளுநர் பதவி என்பதே கங்காணியாக மாநில அரசின் செயல்பாடுகளைக் கவனிக்க பிரிட்டிஷ் இந்தியாவில், அதாவது விடுதலைக்கு முன்பு, மக்களாட்சி முழுமையாகாத நிலையில் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் விடுதலைக்குப் பின் மக்களாட்சி என்று அறிவித்துக்கொண்ட போதும் ஒன்றிய அரசின் நியமன ஆளுநர் பதவியைத் தொடரவிடுவதும், அவ்வப்போது மாநில அரசின் செயல்பாடுகளில் அவர் குறுக்கிட முற்படுவதும் மக்களாட்சியைக் கேலிக் குரியதாக ஆக்கிவிடுகிறது.

ஆளுநர் என்ற கயிற்றைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கும் ஒன்றிய அரசு; மக்களாட்சியை, ஒரு ஜனநாயக ஆட்சியை விரும்பவில்லை என்றே தோன்றுகின்றது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மராத்திய உத்தவ் தாக்கரே அரசின் சிறப்புச் சட்டப் பேரவையைக் கூட்டிப் பெரும்பான்மையை நிரூபிக்க ஆளுநர் உத்தரவிட்டதால் அந்த ஆட்சி வீழக் காரணமாக அமைந்தது. அது அதிருப்தி சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியைப் பறிப்பது குறித்த குழப்பம் நிலவக் காரணமாக அமைந்தது. இந்நிலையில் உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசனப் பிரிவு தன் தீர்ப்பில் ஆளுநரின் இந்தச் செயல்பாடு தவறானது எனக் கூறியுள்ளது. ஆனால் உத்தவ் தாக்கரே அவர்களை மீண்டும் முதலமைச்சராக்க முடியாது என்றும் கூறியுள்ளது. அதற்குக் காரணமாக உத்தவ் நம்பிக்கை வாக்கெடுப்பில் தோற்றுப் பதவியிழக்கவில்லை. மாறாகத் தாமாக முன்வந்து பதவி விலகினார் என்றும் அத்தீர்ப்பு கூறியுள்ளது

இதுபோன்ற நிகழ்வுகளால் மக்களாட்சி மீது ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்த அய்யங்கள் எழுகின்றன. தவறாக செயல்பட்ட ஆளுநருக்கு எந்தத் தண்டனையும் கிடையாது. அந்தத் தவறால் கவிழ்ந்த, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை மீண்டும் நிறுவ முடியாது. ஆனால் நடந்தது மட்டும் அநீதி எனத் தீர்ப்பளிக்கப் படுகிறது. உத்தவ் தாக்கரே பதவி விலகினார் என்றால், எது அவரைப் பதவி விலகச் செய்தது? ஆளுநரின் தவறான நடவடிக்கை தானே! அப்படியானால் இதுவும் ஆளுநரின் தவறான நடவடிகையின் தொடர்நிகழ்வின் பகுதி தானே? ஆளுநர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராகத் தவறான நடவடிக்கை எடுத்தாலும், அதை எதிர்கொள்ள என்ன வழி இருக்கிறது? இந்த இடத்தில் நியமன ஆளுநரின் அதிகாரம் குளறுபடியாகி மக்களாட்சி அரசைக் குலைக்கும் என்றால் அந்த ஆளுநர் பதவி இருக்க வேண்டுமா என்ற கேள்வி எழத் தொடங்கி விட்டது மக்களிடம்.

தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ள பல சட்டவரைவுகள் சட்டமாகாமல் காலதாமதத்தை ஆயுதமாக பயன்படுத்தும் ஆளுநர் இரவியின் நடவடிக்கை இங்கே கவனிக்கத்தக்கது. இதுவும் அரசுக்கு எதிரான திட்டமிட்ட காலதாமதமே. அது அவர் பேச்சில் இருந்தே வெளிப்படுகின்றது. இதுவும் மிகத் தவறான நடவடிக்கை. மக்களாட்சி மீதான தாக்குதல்.

இதை எதிர்த்து தமிழ்நாடு அரசு, சட்டவரைவுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்க கால அளவு வரையறுக்கப்பட வேண்டும் என்பது கூட தற்காலிகத் தேவை என்பதே சரியாகும். ஆனால் நிரந்தர தீர்வு என்பது ஆளுநர் என்ற தேவையற்ற பதவியை ஒழிப்பதுவும், மாநில சுயாட்சிக் குரலை உயர்த்துவதுமே ஆகும். மாநில சுயாட்சி என்பது திராவிடக் கொள்கைகளில் ஒன்று. அதுவே இந்தியாவையும் முழுமையான மக்களாட்சியாக மாற்றும் வல்லமை பெற்றதாகும்.

ஆளுநரின் நேரடி அதிகாரம் கட்டுப்படுத்த முடியாத வானளாவிய அதிகாரமாய் இருப்பது மக்களாட்சிக்கு எதிராக அமையும். ●

**சென்னை மாநகராட்சியின் வரவேற்கத்தக்க முடிவு**

சென்னை மாநகராட்சி 786 பூங்காக்களைப் பராமரித்து வருகிறது. அண்மையில் அவற்றில் 584 பூங்காக்களை வெளிக்கொணர்வுப் பணியாளர்கள் (outsourcing) மூலம் பராமரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு நியமிக்கப்படும் பணியாளர்கள் ஒப்பந்ததாரர்கள் மூலமாக, நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட வாய்ப்புள்ளது. அவர்களுக்குத் தமிழ் தெரியாமல் இருப்பின் அது இங்குள்ள மக்களிடம் தொடர்பு கொள்ளவும், புகார்களைப் பெற்று நடவடிக்கை எடுக்கவும் இடையூறாக இருக்கும் என்பதால், அவ்வாறு பணியமர்த்தம் செய்யப்படும் பணியாளர்களுக்குத் தமிழைப் படிக்கவும், எழுதவும் தெரிந்திருக்க வேண்டும் என்ற விதிமுறையை மாநகராட்சி கொண்டு வந்துள்ளது. சென்னை மாநகராட்சி இம்முடிவு வரவேற்கத்தக்கது.

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

# கருஞ்சட்டைத் தமிழர்

## 'தமாஷ்' பண்ணும் அண்ணாமலை

தி.மு.க வின் ஊழல் பட்டியலை வெளியிடப் போகிறேன் பார் என்று துள்ளிக் குதித்தார் அண்ணாமலை.

அதற்காக மாதம், நாள், நட்சத்திரம், நேரம் எல்லாம் குறித்தார் .கடைசியில் அவர் வெளியிட்டது ஊழல் பட்டியல் அல்ல, வெறும் சொத்துப் பட்டியல் தான். இதை இணைய தளத்தில் கூடப் பார்க்கலாம். இதற்கு ஏன் அவர் இவ்வளவு மெனக்கெடுகிறார்?

இப்பொழுது ஜூலை மாதத்தில் இரண்டாம் பட்டியலை வெளியிடப் போவதாகப் பயமுறுத்தியிருக்கிறார் அவர்.

பா.ஜ.க வின் தமிழ்நாடு மாநிலத் தலைவராக இருக்கும் அண்ணாமலை அரசியல் செய்ய வேண்டும்.

அதை விட்டு விட்டு இப்படியெல்லாம் லேகியம் விற்பவரைப் போல் பேசிக் கொண்டு இருக்கக் கூடாது.

மாண்புக்கு உரியவர்களான முதல்வர் ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி, கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி உள்பட. டி.ஆர்.பாலு, ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் அண்ணாமலை மீது அவதூறு வழக்கு தொடுத்திருக்கிறார்கள் என்றால், அது அவரின் தில்லு முல்லுகளை அம்பலப்படுத்தத் தானே ஒழிய அவரிடம் பணம் வாங்குவதற்கு அல்ல.

நம்ம அண்ணாமலை சொல்லி இருக்கிறார் அவரின் நண்பர்கள் தான் அவருக்கு உதவி வருகிறார்கள் என்று.

ஆர்.எஸ்.பாரதி சொல்கிறார் அண்ணாமலை ஒரு வருடம் 'உள்ளே' போகப் போகிறார் என்று. அதற்கு யார் என்ன செய்ய முடியும்?

தி.மு.கவினர் 1461 கோடி ரூபாய் இழப்பீடு கேட்டிருக்கிறார்களாம்.

அதனால் பா.ஜ.க தமிழ்நாட்டில் தலைகால் தெரியாமல் வளர்ந்து விட்டதாகப் புளகாங்கிதம் அடைகிறார் அவர். அதைத் தவிர வேறு என்ன செய்வார், பாவம்.

எதற்கு என்ன பேசுவது என்று தெரியாமல் பேசுபவர்களை நம்ம நகைச்சுவை நடிகர் வடிவேலு சொல்வார் 'மங்குனி, மங்குனி' என்று.

பா.ஜ.க வின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலையிடம் ஒரு வேண்டுகோள்.

தயவு செய்து குடுகுடுப்பை ஆட்டி 'தமாஷ்' பண்ணாதீர்கள். அரசியல் செய்ய முயற்சி செய்யுங்கள்.

முடியவில்லை என்றால் ஓய்வாவது எடுத்துக் கொள்ளுங்கள்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408



புரட்சிக் கவிஞர் பிறந்த நாளான 29-04-2023 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சென்னை மாவட்டத் தோழர்கள், தலைமை அலுவலகத்தில் புரட்சிக் கவிஞரின் படத்திற்கு மாலை அணிவித்து புகழ் வணக்க மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்வில் தோழர்கள் லாரன்ஸ், திராவிடமணி, இக்லாஸ், மனோகர், லோகபாலன், செந்தாமரைக் கண்ணன், அசோக், நன்முகில் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டார்கள்.



பொதுவுடமைச் சித்தாந்தத்தை உலகுக்குத் தந்த இரு மேதைகளில் முதன்மையானவரான காரல் மார்க்ஸ் பிறந்த நாளான 05-05-2023 அன்று அவரின் படத்திற்கு மாலை அணிவித்து புகழ் வணக்க மரியாதை செய்தனர் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சென்னை மாவட்டத் தோழர்கள். இந்நிகழ்ச்சியில் தோழர்கள் 'பெல்' ராஜன், தி.க.சண்முகம், முத்தையா குமரன், இக்லாஸ், லோக பாலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

# பெரியவர் எல். இளையபெருமாள்

பேரா.சுவாமிநாதன் தேவதாஸ்,
சமூகநீதி கண்காணிப்புக் குழு உறுப்பினர்

காட்டுமன்னார்குடியில் 1946 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலச் சங்கம் என்ற அமைப்பினை உருவாக்கி சுற்றியுள்ள பகுதிகளில் தன்னுடைய சமூகப் பணியைத் தொடங்கினார் பெரியவர் எல். இளையபெருமாள் அவர்கள். இச்சங்கத்தின் பொங்கல் விழா மாநாடு ஒன்றில் (1947) பங்கேற்ற ஆதி திராவிட மக்கள் இளைய பெருமாளை தங்களின் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். அன்று முதல் தென்னாற்காடு மாவட்டத்தில் குறிப்பாக சிதம்பரம் காட்டுமன்னார்குடி பகுதியில் தலைவர் என்று சொன்னால் அது இளையபெருமாள் அவர்களைத்தான் குறிக்கும்.

ஆதி திராவிட மக்களின் உரிமைகளுக்காக குறிப்பாக, கூலி உயர்வுக்காகவும், தீண்டாமை ஒழிப்பிற்காகவும் பல போராட்டங்களை நடத்தியுள்ளார்.



1950களில் பறையடிப்பது என்பது இழிவானதாகப் பார்க்கப்பட்டது. இறப்பு நிகழ்ச்சிகளில் ஆதிதிராவிடர்கள் பறை அடிப்பது வழக்கமாக இருந்தது. இதனால் ஆதி திராவிடர்கள் இழிவாகக் கருதப்பட்டு, நடத்தப்பட்டு வந்தனர். எனவே, பறையடிக்கும் வழக்கத்தை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்று இளையபெருமாள் முடிவெடுத்து, அதற்கென ஒரு இயக்கமே நடத்தினார்.

கீழ்வெண்மணியில், 1968 ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் தேதி கூலி உயர்வு கேட்ட விவசாயக் கூலிகள் 20 பெண்கள், 19 குழந்தைகள் உட்பட 44 தலித்துகளை, சாதி இந்து நில உடமைக்காரர்கள் ஒரே குடிசையில் வைத்து எரித்து சாம்பல் ஆக்கினார்கள். இந்தச்சம்பவத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் கைதானார்கள். பெரும் நில உடமைக்காரர்கள், தலித்துகள் வசிக்கின்ற இடங்களுக்குச் சென்று அவர்களே தீ வைத்தார்கள் என்பது நம்ப முடியாததாக இருக்கிறது. ஆகவே அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்று ஐந்தாண்டுகளுக்குப் (1973)பிறகு உயர் நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டார்கள். 1978 இல் விழுப்புரத்தில் நடந்த சாதி வன்கொடுமையில் 12 தலித்துகள் கொல்லப்பட்டதுடன் நூற்றுக்கணக்கான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

இது போன்ற கலவரங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நின்று அவர்களுக்கு நீதி கிடைத்திட இளையபெருமாள் பெரும்பங்காற்றினார்.

இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினராக (1952) கடலூர் மக்களவைத் தொகுதி உறுப்பினரானார். இரண்டாவது(1957) மற்றும் மூன்றாவது(1962) நாடாளுமன்ற பொது தேர்தலிலும் காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினராக சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதியில் வெற்றி பெற்று 15 ஆண்டுகள் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராகப் பெரும் பணி ஆற்றினார். நான்காவது முறையாக 1967இல் சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய வேட்பாளராகக் களமிறங்கி, திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் மாயவன் அவர்களிடம் வெற்றி வாய்ப்பை இழந்தார். 1980 சட்டமன்றத் தேர்தலில் சென்னை எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்றத்திலும் சிறப்பான பங்காற்றினார்.

இந்திய அரசியல் சாசனம் மூலம் தீண்டாமை ஒழிக்கப்பட்டு, 1955இல் தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டு நடைமுறைக்கு வந்த பின்னரும் கூட தீண்டாமைக் கொடுமை நாடெங்கிலும் காணப்படுவதைக் கருத்தில் கொண்டு, இந்திய அரசு 1965 ஆம் ஆண்டு, இளைய பெருமாள் தலைமையில் 8 உறுப்பினர்கள் கொண்ட"இளையபெருமாள் தீண்டாமை ஒழிப்பு கமிட்டி" யை நியமித்தது.

இக்குழுவின் பரிந்துரைகளை 431 பக்கங்கள் கொண்ட அறிக்கையாக 1969 சனவரி 30 அன்று பிரதமர் இந்திரா காந்தி அரசிடம் சமர்ப்பித்தது, இளையபெருமாள் குழு.

இந்த அறிக்கையை அரசிடம் சமர்ப்பிப்பதற்கு முதல் நாள் இரவு அவரது அறை தாக்கப்பட்டு அறிக்கை சில விஷமிகளால் களவாடப்பட்டு விட்டது. இதை முன்கூட்டியே எதிர்பார்த்த இளையபெருமாள் அறிக்கையின் ஒரு பிரதியை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் இரா. செழியன் அவர்களிடம் கொடுத்து வைத்து அந்த அறிக்கையைத் தான் அரசிடம் சமர்ப்பித்தார்.

1976 முதல் தமிழ் நாடு காங்கிரசின் 'அரிஜன செல்' தலைவர் பதவி வகித்து 1979 இல் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவரானார் எல்.இளையபெருமாள். பிறகு, காங்கிரசில் இருந்து வெளியேறி 1989 இல் இந்திய மனித உரிமைக் கட்சியைத் தொடங்கியவர், 2003இல் மீண்டும் காங்கிரசில் இணைந்தார். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவராக இருப்பினும், பெரியவர் எல்.இளையபெருமாள் அவர்கள் இந்திய நாட்டின் வளர்ச்சிக்கும், ஒருமைப்பாட்டிற்கும், சமூக நல்லிணக்கத்திற்கும், குறிப்பாக ஆதி திராவிட மக்களின் முன்னேற்றத்திற்கும் ஆற்றிய பெரும் பணிகளுக்கு அங்கீகாரம் வழங்கிப் போற்றும் வகையில் 1998 இல் கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு அவருக்கு முதன் முறையாக "அண்ணல் அம்பேத்கர் விருது" அளித்து கௌரவித்தது.

சிதம்பரத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் 08.9.2005 அன்று அந்த மாபெரும் தலைவர் இளையபெருமாள் மறைவெய்தினார்.

பெரியவர் இளையபெருமாள் வழியில் சுயமரியாதைச் சமதர்ம சமூகத்தை அமைப்போம் என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 18-04-2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், விதி 110 இன் கீழ் அறிவித்து பெரியவர் எல். இளையபெருமாள் அவர்களின் புகழுக்கு புகழ் சேர்த்து அனைவரின் பாராட்டுதலையும் பெற்றார். ●